2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்றைக்கு 23–3–2020, 10–15 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தைக் கூட்டி உள்ளதாக அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களுக்கு நேரடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. பேரவையிலும் அதுசம்பந்தமான அறிவிப்பை வெளியிட்டிருந்தேன். மேலும், நானே குழு உறுப்பினர்களுக்குத் தொலைபேசி வாயிலாகவும் தகவல் தெரிவித்தேன்.

இன்றைக்கு கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 24–3–2020 முதல் 31–3–2020 வரை எடுத்துக்கொள்வதாக ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவால் முடிவு செய்யப்பட்ட மானியக் கோரிக்கைகள் நாளை 24–3–2020 விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பெறும்.

மேலும், 24–3–2020 அன்றே, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும், ஏனைய அரசினர் அலுவல்கள் ஏதேனும் இருப்பின் அதுவும் எடுத்துக்கொள்ளப்பெறும். ந ா ள ை வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை என அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை அலுவலில் மாற்றம் குறித்து ஒரு தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 235–ன்கீழ் கீழ்க்காணும் தீர்மானத்தை மொழிகிறேன்:

“இன்றைக்கு 23–3–2020 கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க, 24–3–2020 முதல் 31–3–2020 வரை எடுத்துக்கொள்வதாக ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவால்